
# கீதாசார்யன்






சோளிங்கபுரம் தக்கான் (உத்ஸவர்)

# கீதாசார்யன்-14

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।"

தொகுதி2 | ஸித்தார்த்தி ஹு | கார்த்திகை மீ | நவ79 | பகுதி2




ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M.A.**

**P. T சுந்தர வரதன்**
நிதிக் காப்பாளர்

**N. கணபதி**
விளம்பரப் பொறுப்பாளர்

**7. தெற்கு மாடவீதி,**

திருவல்லிக்கேணி : : சென்னை-600 005

ஆண்டுச் சந்தா ரூ. 10

விலை ரூ. 1-00

# ஸ்ரீமத் பகவத் கீதை

யேஷாமர்த்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா ஸுகானிச
த இமே வஸ்திதா யுத்தே ப்ராணும்ஸ்த்யக்த்வா தனானிச (33)

எந்த ஆசாரியர்கள் பொருட்டு இந்த அரசும் போகங்களும், சுகங்களும் விரும்பப்படுகின்றனவோ, அவர்கள் உயிர்களையும், செல்வங்களையும் விடத் தயாராயிருக்கிறார்கள்.

ஆசார்யா: பிதா: புத்ராஸ்ததைவச பிதாமஹா:
மாதுலா: ச்வசுரா: பௌத்ராஸ்யாலா: ஸம்பந்திநஸ்ததா (34)

ஆசாரியர்களும், தந்தைகளும், பிள்ளைகளும், பாட்டனார்களும், மாமன்களும், மாமனார்களும், மைத்துனன்களும், சம்பந்திகளும் அவ்வண்ணமே (இங்கு நிற்கின்றனர்).

ஏதாந் ந ஹந்துமிச்சாமி க்ந தோபி மதுஸூதந
அபித்ரைலோக்ய ராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ருதே (35)

மதுசூதனே, இவர்கள் என்னைக் கொல்லுகின்றவர்களா யினும், மூவுலக அரசுக்காகவும் இவர்களை நான் கொல்ல விரும்பவில்லை. இந்த பூமிக்காகக் கொல்லவும் வேண்டுமோ?

நிஹத்ய தார்த்தராஷ்ட்ராந் ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்ஜநார்தந
பாபமே வாச்ரயேதஸ்மாந் ஹத்வைதாநாததாயிந.

திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளைக் கொன்று எங்களுக்கு என்ன மகிழ்ச்சி வந்துவிடப் போகிறது? கொடியவர்களா யினும், இவர்களைக் கொல்வதினால் நம்மைப் பாவம் வந்தடைந்தே தீரும்.

---

மேலட்டையில்: சோளிங்கபுரம் நரஸிம்மர் (மூலவர்)
நன்றி - சி...

# சோளிங்கபுரம்

T. A. பாஷ்யம்

**பார்த்தன் :** கண்ணு சென்ற மாதம் நாம் திருவிட வெந்தை, திருக்கடன்மல்லை ஆகிய இரு திவ்யதேசங்களை ஸேவித்தோம். மேலும் ஐப்பசி மாதத்தில் அவதரித்த பூதத்தாழ்வாரின் அவதாரத்தலத்தை அம்மாதத்திலேயே ஸேவித்தது மிகவும் பொருத்தமாக அமைந்தது. அது போல இக்கார்த்திகை மாதத்திற்குச் சிறப்பு தரும் திவ்ய தேச மொன்றை இன்று நாம் ஸேவிக்கலாமா? அப்படி ஏதாவது ஒரு திவ்யதேசம் அருகில் உள்ளதா?

**கண்ணன் :** ஏன் இல்லே? கடிகாசலம் என்று புராண ப்ரஸித்தமான சோளிங்கபுரத்தை கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் சேவிப்பது சாலச் சிறந்ததென்று பெரியோர் கூறுவர். இப்போது மணி (காலை) 6. எனவே நாம் இன்று அங்கு செல்வோம்.

**பார்த்தன் :** நானும் சோளிங்கபுரத்தைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேனேயொழிய நேரில் ஸேவித்ததில்லை! இன்று தான் அதற்கு வேளை வந்தது போலும். அவ்வூர் எங்குள்ளது?

**கண்ணன் :** சோளிங்கபுரத்தில் மலைமீது பெருமாள் எழுந்தருளியுள்ளார். அம்மலை அரக்கோணம் — காட்பாடி ரயில் மார்க்கத்தினிடையிலுள்ளது. 'சோளிங்கர்' என்றே ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. ஆனால் இந்த ஸ்டேஷனி லிருந்து ஸன்னிதி 14 கி. மீ. தூரத்திலுள்ளது. எனவே நாம் இப்போது ரயில் மூலம் அரக்கோணம் ஸ்டேஷன் சென்று அங்கிருந்து பஸ் பிடித்துச் சென்றால் மலையடிவாரத்திற்கே செல்லலாம்.

**பார்த்தன் :** அப்படியே செய்வோம், போகும் வழியில் இவ்வூர் பெயர்க்காரணத்தையும் வரலாற்றையும் சொல்லு.

**கண்ணன் :** வடமொழியில் **'கடிகா'** என்பது ஒரு நாழிகை நேரத்தைக் குறிக்கும். ஸ்ரீப்ரஹ்லாதனுக்காக, ஸ்ரீமந்நாராயணன் மேற்கொண்ட நரஸிம்ஹாவதாரத்தைத் தரிசிக்க விரும்பி ஸப்தரிஷிகள் தவம் செய்ய ஆரம்பித்தனராம். ஒரு நாழிகைக்குள் எம்பெருமான் அவர்கள் விரும்பியபடியே காட்சியளித்தான். ஒரு நாழிகை நேரத்திலேயே ஸப்தரிஷிகளுக்கு விரும்பிய பலனைக் கொடுத்தபடியால் இது கடிகாசலம் எனப்படுகிறது. செந்தமிழில் **திருக்கடிகை** எனப்படுகிறது. இந்த திவ்யதேசத்தில் ஒரு நாழிகை தங்கினாலும் மோக்ஷம் சித்திக்கும் என்று புராணம் கூறுகிறது சோழஸிம்ம ராஜபுரம் என்பது மருவி **சோளிங்கபுரம்** ஆயிற்று.

**பார்த்தன் :** ஒரு நாழிகை என்ன கண்ணா! ஒரு நாள் முழுவதுமே தங்கலாம். நமக்குத்தான் நிறைய அவகாசம் இருக்கிறதே.

**கண்ணன் :** அதுதான் முடியாது. உனக்கு நான் சொல்ல மறந்து விட்டேன். கடிகாசலம் என்ற மலை, சோளிங்கபுரம் என்னும் ஊருக்கு 3 கி மீ முன்பாகவே **'கொண்டபாளையம்'** என்னுமிடத்தில் அமைந்துள்ளது. சுமார் 400 அடிகள் உயரமுள்ள அம்மலையின் உச்சி மீது நரஸிம்மர் மூலம் ஸன்னிதி அமைந்துள்ளது. சுமார் 1000 படிகள் கொண்ட அம்மலை மீது ஏறுவது சற்று சிரமம்தான். படிகள்வேறு நெட்டாகவேயிருக்கும். மலை மீதுள்ள ஸன்னிதி காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில்தான் திறந்திருக்கும். இரவு மலை மீது எவரும் தங்குவதும் இல்லை!

**பார்த்தன் :** அப்படியானால் ஸன்னிதி கைங்கர்ய பரர்கள் எங்கு தங்குகிறார்கள்? மலை மீது மூலவர் எழுந்தருளியிருக்கிறார் என்று கூறினாயே. உத்ஸவரும் மலை மீதே எழுந்தருளி

யிருக்கிறாரா, அல்லது திருநீர்மலையைப் போல மலையடி வாரத்தில் எழுந்தருளியிருக்கிறாரா!

**கண்ணன் :** உன் ஞாபக சக்தியைப் பாராட்டுகிறேன். இம்மலையிலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் சோளிங்கபுரம் என்ற சிற்றூர் அமைந்துள்ளது. அவ்வூரில்தான் உத்ஸவர் எழுந்தருளியிருக்கிறார். இதோ இதுதான் கொண்டபாளையம் எனும் மலையடிவாரம். இங்குள்ளதுதான் !தக்கான்குளம் எனும் புஷ்கரிணி. இக்குளக்கரையில்தான் தொட்டாசாரியர் என்ற மஹாசார்யருக்கு காஞ்சி வரதராஜன் தனது கருட ஸேவையைக் காண்பித்தான். அந்த வரதராஜன் ஸன்னிதியும் இங்குள்ளது. இப்போது நாம் இக்குளத்தில் நீராடிவிட்டு அதோ தெரியும் சின்னமலைக்குச் செல்வோம், வா.

**பார்த்தன் :** சின்னமலையா! இதைப்பற்றி நீ ஒன்றுமே கூறவில்லையே! இங்கு யார் எழுந்தருளியிருக்கிறார்?

**கண்ணன் :** இம்மலையில் சிறிய திருவடி எனப்படும் ஹனுமான் எழுந்தருளியிருக்கிறார். பெரியமலையில் எழுந்தருளி யிருக்கும் நரஸிம்மன், ஹனுமானுக்கு ப்ரத்யக்ஷமாகி ஸேவை ஸாதித்தான் என்று புராணங்கள் கூறுகின்றன இப்போது காலை 10 மணி ஆகிறது. இம்மலை மீது கோயில் கொண்டுள்ள ஹனுமாரை சுமார் ஒரு மணி காலத்திற்குள் சேவித்துவிட்டுத் திரும்பி விடலாம்; அவ்வளவு சிறியமலை.

அதோ பார். சிறிய திருவடி நான்கு திருக்கரங்களோடும், ஒருவாழி திருச்சங்குகளோடும் (ஸ்ரீமந்நாராயணனைப் போலவே) பெரியமலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானை நோக்கிய வண்ணம் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கிறான், எம்பெருமான் தன் அடியார்களுக்கு ''தன்னையே ஒக்க அருள் செய்வான்'' என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு சான்று வேண்டுமோ? நன்றாக ஸேவித்து விட்டாயல்லவா. தவிர

பிரதக்ஷிணத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதர், ராமர் ஸன்னிதிகளையும் ஸேவி. இனி நாம் கீழே இறங்கி பெரிய மலைக்குச் செல்வோம்.

**பார்த்தன் :** கண்ணா! பெரியமலை பெயருக்கு ஏற்ப பெரிய மலையாகவே தென்படுகிறதே! இப்போது மணி 11-00 ஆகி விட்டதே. ஏறுவதற்கு எவ்வளவு நாழிகை ஆகும்? மலைமீது ஏறமுடியாதவர்கள் என்ன செய்வது?

**கண்ணன் :** மலை மீது ஏறுவதற்குச் சுமார் ஒரு மணி காலம் ஆகும். மலை மீது ஏற முடியாதவர்கள் 'டோலி' எனும் சாதனத்தை கூலிக் கொடுத்து உபயோகிக்கலாம். எம்பெருமானைப் பற்றியே பேசிக் கொண்டு ஏறினோமானால் மலை ஏறும் சிரமமே தெரியாது.

**பார்த்தன் :** அதை நீ சொல்லவும் வேணுமோ! அதுதான் நாம் அனுபவத்தில் கண்ட உண்மை ஆயிற்றே. சரி. இவ்வெம்பெருமானைப் பாடிய ஆழ்வார்கள் யார் யார்?

**கண்ணன் :** பேயாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும். திருமங்கை ஆழ்வார் '**தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனி**' என்று பாடியபடியே மலையின் உச்சியில் அக்காரக்கனியெம் பெருமான் எழுந்தருளியுள்ளான். அக்காரக்கனி என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

**பார்த்தன் :** அக்காரம் என்றால் சர்க்கரை. கனியென்றால் பழம். எனவே இவன் சர்க்கரைப் பழம் போல இனிமையானவன் என்பதுதானே பொருள்?

**கண்ணன் :** சரியாகச் சொன்னாய். கொஞ்சம் இப்படி நினைத்துப்பார். சாதாரண மரத்திற்குப் பதில் சர்க்கரையினாலேயே ஒரு மரம் தோன்றினால், அம்மரம் ஒரு பழம் பழுத்தால் அப்பழம் (சர்க்கரைக்கனி) எப்படி இனிக்குமோ அப்படியே இவ்வெம் பெருமானும் அடியவர்க்கு இனியவன் ஆவான்.

**பார்த்தன் :** அடா! அதற்குள் மலை மீது ஏறி ஸந்நிதிக்குள் வந்துவிட்டோமே!

**கண்ணன் :** நுழைந்ததுமே முதலில் உள்ளது தாயார் ஸந்நிதிதான். மிகவும் வரப்ரஸாதியான இத்தாயாருக்கு அம்ருதவல்லி என்று திருநாமம். இனி இப்படியே பிரதக்ஷிண மாகச் சென்று பிரதான ஸந்நிதிக்குச் செல்வோம். அதோ நரஸிம்மன் நான்கு திருக்கரங்களோடு, பிரகலாதனுக்கு ஸேவை ஸாதித்த அதே சாந்த சொருபத்துடன், கிழக்கே திருமுகமண்டலமாய் (ஸிம்ஹகோஷ்டாக்ருதி விமானத்தி னடியில்) யோகநரஸிம்ஹனாய் வீற்றிருக்குமழகைப்பார். இவ்வழகுக்கு ஈடு இணையும் உண்டோ! அழகியான் தானே! அரியுருவம் தானே என்ற ஆழ்வார் வாக்குதான் எவ்வளவு உண்மை!

**பார்த்தன் :** ஆம் கண்ணா! திரும்பவே மனமில்லை. எனினும் நாம் கீழே சென்று உத்ஸவரையும் சேவிக்க வேணுமே!

**கண்ணன் :** படிகள் இறங்குவது மிகவும் சுலபம். இறங்குவோமா!

**பார்த்தன் :** ஆமாம், இங்கே ஒரே கூட்டமாக இருக்கிறதே! மேலும் சத்திரங்களும் கடைகளும்கூட நிறைய இருக்கின்றன போலிருக்கிறதே!

**கண்ணன் :** இது ஒரு விசேஷமான ப்ரார்த்தனை ஸ்தலம். பேய், பிசாசு, சூன்யம் என்று சொல்லப்படும் அநேகம் வியாதிகள் தீர இங்கே வந்து விரதம் கடைப்பிடித்து பிரதி தினமும் இந்த தக்கான் குளத்தில் நீராடி மலை மீது ஏறி எம்பெருமானை வலம் வந்து தங்கள் நோய்கள் தீர்ந்து மகிழ்ச்சியடைவதைக் கண்கூடாகக் காணலாம்.

**பார்த்தன் :** மலையிலிருந்து இறங்கி விட்டோமே! இனி ஊருக்குள் செல்லலாம் அல்லவா? ஊர் இங்கிருந்து மூன்று

கி. மீ. தூரத்தில் உள்ளதாகச் சொன்னாயே! எப்படி போகலாம்?

**கண்ணன் :** இங்கிருந்து ஊருக்குச் செல்ல பஸ் வசதிகள் உண்டு இப்போது மணி 3 (மதியம்) ஆகிறது ஸன்னிதியை 5 மணிக்குத்தான் திறப்பார்கள்; எனவே நாம் நடந்தே செல்வோம். ………… இதோ ஸன்னிதி வீதி வந்துவிட்டது. அவ்வீதியில்தான் இவ்வூர் ஸ்தலத்தாரான தொட்டாசாரியர் ஸ்வாமி திருமாளிகை இருக்கிறது ஸந்நிதிக்குள் நுழைவோம். அழகான, தூய்மையான ஸன்னிதி. பிரதான ஸன்னிதியில் அக்காரக்கனி யெம்பெருமானும் பின்புறம் தனித்தனி ஸன்னிதிகளில் கேசவப்பெருமானும்ஆண்டாளும்எழுந்தருளியுள்ளார்கள். ஆழ்வார் ஆசாரியர்கள் ஸன்னிதிகளும் உள்ளன. எல்லாவற்றையும் ஸேவித்துவிட்டோமே! புறப்படுவோமா!

**பார்த்தன் :** உத்ஸவங்கள் பற்றி ஏதும் சொல்லவில்லையே! உத்ஸவர் மலைக்கு எழுந்தருளுவதுண்டா?

**கண்ணன் :** சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரம் தீர்த்தவாரியாக ப்ரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. ப்ரம்மோத்ஸவ ஆரோஹண அவரோஹணங்களுக்கும், பவித்ரோத்ஸவத்தின்போதும் உத்ஸவர் மலைக்கு எழுந்தருளுகிறார். தவிர, பங்குனி உத்தரத்தன்று திருக்கல்யாணத்திற்காக, மலைக்கு எழுந்தருள்கிறார். மேலும் நவராத்ரி உத்ஸவத்திற்காக தாயார் இங்கு எழுந்தருளுகிறார். இங்கு ஐப்பசி ரேவதி (எரும்பீ அப்பா சாற்றுமுறை) வரை எழுந்தருளியிருக்கிறார்.

**பார்த்தன் :** சரி மணி 5-30 ஆகிவிட்டது. இனி சென்னை திரும்புவோம். இன்று நாம மிகவும் சாகசமானகாரியம்தான் செய்திருக்கிறோம். இரண்டு மலைகள் ஏறி இறங்கியதோடல்லாமல் 3 மைல்கள் நடந்திருக்கிறோம் இவ்வளவும் சிரமமில்லாமல் நடந்ததென்றால் அதற்குக் காரணம் எம்பெருமானுடைய இன்னருளே!

# தேவு மற்றறியேன்—13

"நம்பினேன்!" என்ற பாசுரத்தில், மதுரகவியார், தமது தோஷங்களைச் சொல்லி, தன்னிடம் ஒரு நன்மையுமின்றிக்கே இருக்க, தம்முடைய நிர்ஹேதுக க்ருபையால் நம்மாழ்வார் தன்னை அண்டவிட்டுக் கொண்டமையால் அவர் திருவடிகளில் அன்புபூண்டு தோஷமற்றவராக ஆனமையைச் சொல்லி, மேலே பழயபடி தோஷம் புகாமல் என்றும் தம்முடைய (ஆழ்

Dr. V.V. ராமானுஜம்

வாருடைய) புகழைப்பாடி நற்பேறு பெறும்படி அருள்பாலித்ததைப் பேசியதைக் கீழே அநுபவித்தோம். இப்படி ஆழ்வார் தன்னை உய்வித்ததை *நாடு நகரமும் நன்கறிய—என்கிறபடி யாவருக்கும் தெரியப் பேசி, அவர்களும் ஆழ்வாரைப் பற்றி உய்யும்படி அவருடைய க்ருபாப்ரபாவத்தை விளங்கச் செய்வேன் என்கிறார் மேலே.

கண்டு கொண்டு என்னைக் காரிமாறப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினன்
எண்டிசையும் அறிய இயம்புகேன்
ஒண்டமிழ்ச் சடகோபன ருளையே (7)

பொற்காரியாரின் பெருங்குலத்தில் தோன்றிய பேருதவியாளரான ஆழ்வார் (மாறன்) தம்பெருமையைச் சிறிதுமறியாத என்னை, என் தாழ்ச்சியைப் பாராதே குளிரக்கடாக்ஷித்து கைக்கொண்டு, பலபல பிறவிகளில் வெகுகாலமாகச் சேமிக்கப்பட்ட கொடிய பாபங்களை உருமாய்ந்து போம்படி பண்ணி, தம்புகழை வாயாரப் பேசும்படி அருள்பாலித்தார்! அழகிய தமிழில் பல ப்ரபந்தங்களை யருளிச் செய்த ஆழ்வாரின் பரமக்ருபையை எட்டுத்திக்கிலுமுள்ளவர்கள் யாவரும் அறியும்படி (அறிந்து பயனுறும்படி) எடுத்துச் சொல்லுவேன்.

ஆசார்யவைபவத்தை நாடறியப் பேசுவதே ஸச்சிஷ்யனின் பணி. "குரும் ப்ரகாசயேத் தீமாந் என்பது சாஸ்த்ரம் நமக்கிடும் கட்டளை. ஸதாசார்ய ஸம்பந்தத்தினால் தான் பெற்றபயனை மற்ற யாவரும் பெற்று உய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஆசார்யனின் க்ருபை முதலான பெருமைகளை ஊரறிய விளக்கமுறச் செய்யவேண்டும். இந்த பணியை நன்றாகச் செய்வேன் (விதியை அநுஷ்டிப்பேன்) என்கிறார் மதுரகவியாழ்வார் இங்கு.

ஆழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியில் அவரின் பல சீரிய ஆத்ம குணங்கள் வெளிப்படுகின்றன. அவருக்கு எம்பெருமானிடமுள்ள ஆராத காதல், அவனடியாரிடம் மட்டற்ற பரிவு, ஸம்ஸாரம் (தேஹஸம்பந்தம்) கண்டு பயம், அவனை அடைய த்வரை (பொறுமையின்மை), அர்ச்சாவதார மூர்த்திகளிடம் எல்லையற்ற ஆதரம் இப்படியாகப் பல பல உண்டு. ஆயினும் இவையெல்லாவற்றினும் சீரியது, நம்போல்வார் பகவத்விஷயத்தை இழந்து, இழந்தது குறித்து இழவேதுமின்றிக்கே இருக்கும் தாழ்ந்த நிலையைக் கண்டு மனம் ஸஹிக்காமல், நாம் நன்மையடையும்படி, "திருநாரணன் தான் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ என்பது போன்ற பல நன்மொழிகளைத் தாமாக நமக்கு உபதேசித்துத் திருத்தும் க்ருபாதிசயமே ஆகும். அந்த அருளின் பெருமையை யாவரும் அறியும்படி பேசுவதே தமது தலையாய பணி என்கிறார்.

கண்டு, கொண்டு, என் வல்வினை பாற்றியருளினான்— என்று நன்றிப் பெருக்குடன் பாசுரம் அமைந்துள்ளது. ஆழ்வார், தாம் தேடிக் கொண்டு திரிந்த பெருநிதி கைப்பட்டாற்போல் புல்லியேனான அடியேனைக் கண்டு, அருள் நோக்காலே கைக்கொண்டு, வெகுகாலமாக அடியேன் திரட்டி வைத்துள்ளதும்' பலபல பிறவிகளில் அநுபவித்தாலும் சிறிதும் குறையாமல் நிற்கும் வன்மையுள்ள பாபச்சுவையைப் பொடிபொடியாக விழுந்து இருந்த இடம் தெரியாமல்

தொலைத்தருளினார் *மாம் சரணம் வ்ரஜ—மோக்ஷயிஷ்யாமி என்று கண்ணன் வாக்கு. "என்னைப் புகலாக அடை; உன் பாபங்களைத் தொலைக்கிறேன்" என்றபடி. *தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத்—பாபத்தோட வரினும் விடேன், காத்தே தீருவேன்—என்பது சக்ரவர்த்தி திருமகன்வாக்கு. ஆழ்வாரின் அருளின் ஏற்றமோ, என்னை அவரே கண்டுகொள்ளும்படியும், மேல்வரும் காலமெல்லாம் மீண்டும் தாழாதபடி தம் மடிக் கீழ் வாழும்படியும் அமைத்தது. எம்பெருமான் ஓங்கி உலகளந்த உத்தமனாய் யாவர் தலையிலும் அடியிட்டபோது ஜாம்பவான் ஒரு பெரும் பறையை இடுப்பில் கட்டிக்கொண்டு *ஜிதம் பகவதா ஜகத்—இந்த ஜகத்தெல்லாம் பெருமானால் தன்வசமாக்கிக் கொள்ளப்பட்டது—என்று அவன் சக்தியின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு உலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததாக வரலாறு. அதேபோன்று, ஆழ்வாரின் அருளின் தன்னேற்றத்தை எட்டுதிக்கிலுள்ளாரும் அறிய விளங்கச் செய்வேன் என்கிறார். மேலும், அந்த க்ருபை என்னுடன் நின்றுவிடவில்லை. யதோ வாசோ நிவர்த்தந்தே—அப்ராப்ய மநஸா ஸஹ என்று எந்த விஷயத்தை வாக்குக்கு அடங்காதது என்று சொல்ல இயலாமல் கருதி கைவிட்டதோ, அதை, *அறியச் சொன்ன ஆயிரம் என்று திருவாய்மொழியாகப்பாடி, லோகமடங்க அகவிருளைப் போக்கி வாழ்விக்கும் சடகோபனருளையன்றே நான் இயம்பப் புகுவது? என்கிறார்.

அருமறையாம் வேதங்களை வெளியிட்ட ஸர்வேச்வரன் க்ருபையையும் விஞ்சியது திருவாய்மொழி பாடிய ஆழ்வார் க்ருபை. எம்பெருமான் நம்மிடமுள்ள தீமைகண்டு விலக்குமவன் பின்னர் க்ருபையால் உந்தப்பட்டு, நன்மையென்று பெயரிட்டு ஆட்கொள்கைக்கு ஈடான ஒரு தீமையாவது உள்ளதா என்று ஆராய்வானும். ஆசார்யன் க்ருபையோ நிரபேக்ஷமானது. "இவன் நம்மவன்" என்று ஒருவனை ஆசார்யன் மதித்து பகவானிடம் கொண்டு விட்டால் அவனும் விலக்கப் போகாது. அந்தர்யாமியாய்பி நம்முன்னே இருப்பி

னும் நாம் தவறு செய்யும்போது உடனுக்குடன் தடுப்பதில்லை அவன் ஆசார்யன் தான் அங்கீகரித்தவர்களை மீண்டும் தாழ்ந்துவிடாமல் தடுத்துத் திருத்திப் பணி கொள்ளுமவன். உடையவருடைய ஆசார்யரான பெரியநம்பி தமது குமரரான புண்டரீகாக்ஷரை உடையவரிடம் ஆச்ரயிக்கப்பண்ணியிருந்தார். சேரக் கூடாத ஸஹவாஸத்தினால், அவர் ஒரு நாள் ஆசார்யகோஷ்டியை விட்டு யாருமறியாமல் சென்று விட, காரேய்கருணை இராமாநுசனும் அவரைத் தேடி அலைந்து, தாம் செல்லக் கூடாத இடத்துக்கும் சென்று அவரைக் கைபிடித்தழைக்க, அவரும், "ஜீயா! நான் உம்மை விட்டேன். என்னை அழைக்க வேண்டா" என்று தடுத்தார். உடையவரோ, "நீர் நம்மை விட்டாலும் நாம் உம்மை விடுகிறோமில்லை" என்று தம் அருள் நோக்கால் அவரைக் கடாக்ஷித்து கூட அழைத்துப் போனார் என்பது வரலாறு.

'எவ்வுயிர்க்குமறியவென்று அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்தபுத்தியும், அநர்த்தம் கண்டு ஆற்றாமையும், மிக்க க்ருபையுமிறே; தாய்க்கும், மகனுக்கும், தம்பிக்கும், இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது—என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் நாயனார் திருவாக்கு காண்க. ஈச்வர ஸம்பந்தம் யாவருக்கும் ஒத்திருக்க, அதை உணராமல் கெடும் ஸம்ஸாரிகளின் துர்க்கதியைக் கண்டு அவர்களைத் திருத்தியல்லது நிற்கமாட்டாத கரை புரண்ட காருண்யம் இவர்க்கும் (ஆழ்வாருக்கும்) இவர் (மாறன்) அடி பணிந்துய்ந்த இராமாநுசனுக்குமே உள்ளது. தாய் என்றது ராவணனுக்கும் நல்வார்த்தை சொன்ன பிராட்டியை; மகன் என்றது பலவிதமாக ஹிம்ஸித்த ஹிரண்யனையும் கடைத்தேறப் பண்ணிய பிரஹ்லாதாழ்வானை; தம்பி என்றது தன்னை வெறுத்து உதறிய அண்ணனிடம் நல்லெண்ணத்துடன் உய்யும் வகை சொன்ன விபீஷணாழ்வானை. இவர்கள் காருண்யம் லோகமடங்கத் திருத்த ஹேதுவானதாகச் சொல்ல இயலாது.

ஆழ்வாருடைய க்ருபை இவ்வுலகத்திலும் பெரிது. சித், அசித், ஈச்வரன் என்ற தத்வத்ரயத்தையும் மூழ்கடிக்கவல்லது என்கிறார் பரமாசார்யரான நம்பிள்ளை. (தொடரும்)

# ஸ்ரீ பாகவதப் பெருமை

இளையவில்லி பூவராஹாசாரியர் M. A.

ஸ்ரீ பாகவத புராணத்தின் பெருமை ஸ்ரீபாத்ம புராணத்தில் உத்தர கண்டத்தில் ஆறு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது. அது ஈண்டு முதல்முன்னம் அளிக்கப்படுகிறது.

## "நாரதபக்தி ஸம்வாதம்"

முன்பு ஒரு காலத்தில் நைமிசாரண்யத்தில் எழுந்தருளியிருக்கிற மகா ஞானியான ஸூதபௌராணிகரை, பகவத் கதாம்ருதத்தை அருந்துவதில் மிகுந்த சாமர்த்தியசாலியான சௌநக மஹா முநிவர் கண்டு வணங்கி, கீழ்க் கண்டவாறு வினவினர். "அஞ்ஞானமாகிற இருளை (அகவிருளை)ப் போககுவதில் கோடி ஸூர்யனுக்கு நிகரான ஒளியுடையவரே! அருள் கூர்ந்து எனது செவிக்கு அம்ருதம் போல் இனிதான கதைகளைக் கூறும்; அறிவின்மையை யகற்றி, ஞானம், பக்தி, வைராக்கியம் இவைகளை வளர்த்துக் கொள்ள வழி யாது? இவ்வுலகில் மிகக் கொடுமையான கலியுகத்தில் எல்லா மனிதர்களும் அரக்கர்களாய்த் திரிகின்றனர். துயரங்களாலே துன்புற்ற அவர்களைத் திருத்துவதற்கு வழி யாது? எது எல்லா நன்மைகளைக் காட்டிலும், சிறந்த நன்மையோ, எது பரிசுத்தமான எல்லாவற்றிலும் மிகவும் பரிசுத்தமோ, ஸ்ரீ க்ருஷ்ணனைப் பெறுவதற்கு எது சிறந்த மார்க்கமோ அதைத் தெரிவித்தருள வேணும். "சிந்தாமணி" என்னும் இரத்தினம் இவ்வுலக ஸுகங்களை அளிக்கும் ஆற்றலுடையது. "கற்பகத்தரு" சுவர்க்கலோகச் செல்வங்களைக் கொடுக்கும் பெருமை பெற்றது. (ஆனால் இச்சுகங்களும், செல்வங்களும் அதிக காலம் நில்லாதவை. அற்பமானவை) ஆனால் ஆசாரியன் மனம் மகிழ்வனேயானால் மிகச் சிறந்த யோகி

களுக்கும் கிட்டவரிதான நலமந்தமில்லதோர் நாடான வைகுண்டத்தைக் கொடுப்பானல்லவா ?''

ஸூதர் சொல்லுகிறார் : ''வாரீர் சௌநகரே ! உம்முடைய மனத்தில் பகவானிடம் பக்தியுள்ளது. ஆகவே நன்கு ஆராய்ந்து உமக்கு இதைக் கூறுகின்றேன். எது எல்லா ஸித்தாந்தங்களின் முடிவாக விளங்குவதோ, எது ஸம்ஸார (இவ்வுலக வாழ்க்கைப்) பயத்தை அடியோடு ஒழிக்கக் கூடியதோ, எது ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஆனந்தத்தை விளைவிக்கக் கூடியதோ அதை உமக்குச் சொல்லுகிறேன். மிக ஊக்கத்துடன் கேளும். காலம் என்கிற பாம்பின் வாயில் பிடியுண்டு நடுங்கும் உலகினரின் நடுக்கத்தை நாசம் செய்யவல்ல பெருமையையுடையது, ''ஸ்ரீமத் பாகவதம்'' எனப்படும் திவ்ய சாஸ்த்ரம். கலியுகத்தில் ஸ்ரீசுகமுனிவரால் கூறப் பட்டது. மனத்தூய்மை பெற இதை விட வேறொன்றில்லை. முற்பிறவியில் புண்ய கார்யங்கள் செய்திருந்தாலொழிய இந்த ஸ்ரீபாகவதம் ஒருவனுக்குக் கேட்கப் பெறாது. பரீக்ஷித்து மஹாராஜனுக்கு இந்த ஸ்ரீ பாகவதக் கதையைக் கூற ஸ்ரீசுக முனிவர் ராஜ சபைக்கு எழுந்தருளிய போது, தேவதைகள் அம்ருதம் நிரம்பிய குடங்களை ஏந்திக் கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தனர். ஸ்ரீ சுகரை வணங்கி, சுயகார்யப் புலிகளான அத்தேவர்கள், ''ஸ்ரீ பாகவத கதாம்ருதத்தை எங்களுக்குக் கொடும். இந்த தேவலோக அம்ருதத்தை நீர் எடுத்துக் கொள்ளும். இப்படிப் பண்டமாற்றுச் செய்து கொண்ட பின், அம்ருதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜன் பருகிக் களிக்கட்டும். நாங்கள் எல்லோரும் ஸ்ரீமத் பாகவதாம்ருதத்தைப் பருகிக் களிக்கிறோம்.' என்றனர். இதைக் கேட்ட ஸ்ரீ சுக முனிவர் தேவர்களைக் குறித்துத் தமக்குள் இவ்வாறு எண்ணினார். ''ஸ்ரீ பாகவதம் எங்கே ? அம்ருதம் எங்கே ? கண்ணாடித் துண்டுக்கும், விலையுயர்ந்த ரத்நத்திற்கும் எவ்வளவு வாசியுண்டோ அவ்வளவு வாசியுண்டு ஸ்ரீ பாகவதத்துக்கும் தேவாம்ருதத்துக்கும்.'' ஸ்ரீ சுக முனிவர் இவ்வாறு யோசித்து

தேவர்களை நோக்கிச் சிரித்தார். அவர்களைப் பக்தியற்றவர்களாகவே நினைத்தார். ஆகவே அவர்கட்கு ஸ்ரீ பாகவத கதாம்ருதத்தை அளிக்கவில்லை. (அதாவது கதையைக் கூற வில்லை) ஆகையால் இந்த ஸ்ரீ பாகவதம் தேவர்களுக்கும் கேட்க வரிதாய்விட்டது. (இதன் பெருமையை இச்செய்தி கொண்டே யறியலாம்).

இந்த ஸ்ரீ பாகவதக் கதையைக் கேட்டதால் பரீக்ஷித்து முக்தி ஸாம்ராஜ்யத்தைப் பெற்றான். அதைக் கண்ட பிரம தேவன் ஆச்சரியமடைந்து ஸத்யலோகத்தில ஒரு தராசைக் கட்டினான். அதில், ஓர் தட்டில் மோக்ஷம் அடைவதற்குண்டான உபாயங்களை எல்லாம் இட்டான். மற்றொரு தட்டில் ஸ்ரீ பாகவத மஹாபுராணத்தை வைத்தான். இப்படிச் செய்து நிறுத்துப் பார்த்தான். அப்பொழுது மற்ற மோக்ஷ உபாயங்களெல்லாம் மிகவும் எடையில் குறைந்தவைகளாகவும், ஸ்ரீ பாகவதமே அதிக நிறையுடையதாகவும் இருப்பதைக் கண்டான். அப்பொழுது அங்கு கூடியிருந்த ரிஷிகள் எல்லோரும் இதைக் கண்டு மிகவும் வியப்புற்றனர். கலியுகத்தில் ஸ்ரீ பகவானே, ஸ்ரீ பாகவத சாஸ்த்ர வடிவில் இப்பூவுலகில் அவதரித்துள்ளான் என எண்ணினர். இத்திவ்ய சாஸ்த்ரத்தைப் படித்தாலும், படிப்பதைக் கேட்டாலும், வைகுண்டம் கிடைக்கும். ஸ்ரீ பாகவதக் கதையை ஏழு நாட்களில் கேட்பார்களாயின் மோக்ஷம் கை கூடும். பரம தயாளுக்களான ஸநகர் முதலிய மகரிஷிகள் நாரதர்க்கு இதை முன்னமே கூறினார்கள். அதற்கு முன்னமேயே நாரதர் தம் தகப்பனாராகிய நான்முகனிடமிருந்து இந்தப் புண்ணியக் கதையைக் கேட்டிருப்பினும், இந்த "ஸப்தாஹச்ரவணம்" (7 நாட்களில் கதையைக் கேட்பது) என்னும் முறையை அவருக்கு ஸநகர் முதலியவர்கள் உபதேசித்தார்கள்.

(தொடரும்)

# திருவாய்மொழியும் த்வயமும்

அடிமைதான் அநுபவஜநித ப்ரீதிபூர்வக விளையுமதாகையாலும் அநுபவ ஜநித ப்ரீதிதான் அநுபாவ்ய விஷயாதீநமாகையாலும் அந்த கைங்கர்யத்துக்கடியான ப்ரீதிக்கு நாற்றங்காலான ஸ்வரூப ரூப குண விபூதி பூர்த்தியைச் சொல்லுகிறது நாராயணபதம். "அச்நுதேகாமாந்" "லப்த்வா ஆநந்தீ பவதி" "இமாந்லோகாந் அநுஸஞ்சரந்" "ஸதாபச்

வேளுக்குடி K. வரதாசாரியர்

யந்தி" என்கிறபடியே ஸ்வரூப ரூப குணாத்யநுபவம் ப்ரீதிக்கு ஹேதுவாகக் கடவது. ப்ரீதி, கைங்கர்யஹேதுவாகக் கடவது. இவ்வேயாகில் ஸ்ரீமதே என்கிறவிடத்தில் சதுர்த்தியே அமையும். கைங்கர்ய ப்ரகாசமாகைக்கு நாராயணபதம் வேண்டாவே. ஸ்வரூப ரூப குண விபூதிகள் நாலுக்கும் வாசகமாகையாலே அநுபாவ்ய விஷய பூர்த்தியைக் காட்டக் கடவது நாராயணபதம்.

நாரசப்தம் ரூப குண விபூதிகளுக்கு வாசகமாகிறது. அயநபதம் இவை மூன்றுக்கும் கொள்கலமான ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. அந்த ஸ்வரூபத்தைப் பார்த்தால் "ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம்ப்ரஹ்ம" என்கிறபடியே அசித்திற்காட்டில் அத்யந்த வ்யாவ்ருத்தமான த்ரிவிதாத்ம ஸ்வரூபத்திலும் அத்யந்த 'வ்யாவ்ருத்தமாயிருக்கும். ரூபத்தைப் பார்த்தால் "நபூதஸங்க ஸம்ஸ்தாநோ தேஹோஸ்ய பரமாத்மந:" என்று அப்ராக்ருதமாயிருக்கையாலும் அஸ்த்ரபூஷணாத்யாயத்திற் சொல்லுகிறபடியே ஸகல ஜகதாதாரமாகையாலும் ப்ராக்ருதமுமாய் ஆதேயமுமான ஸர்வசேதந சரீரங்களிலும் வ்யாவ்ருத்தமாயிருக்கும். குணங்களைப் பார்த்தால்

ஹேயகுணாஸம்ஸ்ருஷ்டமாய் நிஸ்ஸீமமுமாய் அபரிச்சிந்நமுமாய் யிருக்கையாலே ஹேய குணஸம்ஸ்ருஷ்டமுமாய் பரிச்சிந்நமுமான ஸர்வ சேதந குணங்களிலும் அதிகமாயிருக்கும். "பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்ய அம்ருதம்திவி" என்று உபய விபூதியும் விபூதிகோடி கடிதையாகையாலே பரிச்சிந்த விபூதிகளில் அதிகையாயிருக்கும். ஆக இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வாதிகனும் "பதிம் விச்வஸ்ய" "பதிம் பதீநாம்" இத்யாதிகளான ச்ருதி சதங்களில் சொல்லுகிறபடியே ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியா நாராயண சப்தத்தாலே கூறப்படுகிறான் என்றபடி. உத்தரவாக்யத்தில் நாராயணபதம் அடிமை கொள்ளுகிறவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது.

எழில் மலர்மாதரும் தானுமான சேர்த்தியிலே இன்பத்தை விளைக்கிறப்போலே "வீவில்லின்பம் மிகவெல்லை நிகழ்ந்த" என்கிறபடியே ஸ்வரூப குண விக்ரஹ விபூதிகளோட கூடி ஆநந்தத்தை விளைத்து அடிமையிலே மூட்டுமவனுடைய பூர்த்தியைக் காட்டுகிறது. பிணங்கியமரர் பேதங்கள் சொல்லும் குணங்களெல்லாம் அநுபாவ்யங்களேயாகிலும் வகுத்த விஷயத்தில் இனிமைக்குத் தோற்று எவிற்றுச் செய்ய வேண்டுகையாலே எழில் கொள் சோதி மலர்புரையும் என்கிற ஸ்வாமித்வ போக்யதைகளிலே இதுக்கு நோக்கு. பூர்வ வாக்யத்தில் நாராயண பதத்துக்கு ஸௌலப்யத்திலே நோக்கு. உத்தரவாக்யத்தில் நாராயண பதத்துக்கு ஸ்வாமித்வ போக்யதைகளிலே நோக்கு இது தத்தத் ப்ரகரணோசிதமா யிருக்கும். பின்னை உலகாரியன் ஈச்வரனுடைய நிரதிசய போக்யத்வத்தைக் கூறும் ஏழாம் பத்துப் பாசுரங்களையும் ஈச்வரனுடைய ஸ்வாமித்வத்தைக் கூறும் எட்டாம் பத்துப் பாசுரங்களையும் ஸாரஸங்க்ரஹத்திலே தொகுத்து அருளிச் செய்துள்ளார். அவ்விஷயத்தையினி யநுபவிப்போம்.

1. கன்னலேயமுதே (7.1 2): கன்னலென்று கருப்புக் கட்டி. அமுதென்று போக்யமுமாய், சாவாமல் காக்குமதா

யிருக்கை. அகலப்போனால் ஆற்றவொண்ணாத போக்யதை யிருக்கிறபடி. ஸர்வதோ முகமான ஸாரஸ்யம் என்றபடி.

2. கொடியேன் பருகு இன்னமுதே (7 1 7): தேவர்களைப் போல நித்யத்வத்தைக் கொள்ளாதே உன்னையே ஆசைப்படுகிற எனக்கு நிரதிசய போக்யனானவனே! தேவர்களைப் போலே உப்புச் சாற்றிலே த்ருப்தனாகப் பெற்றிலேன். தோளும் தோள் மாலையுமாய்க் கடலைக் கடைகிற போதை அழகாயிற்று இவருக்கு அம்ருதம். இவருடைய அம்ருதம் விஜாதியமாயிருக்கிறபடி.

3. அலைகடல் கடைந்த ஆரமுதே (7.2.5): இவருடைய அம்ருதத்தைக் கொண்டாயிற்று அவர்கள் கடல் கடைந்தது.

4. திருமாலின் சீர் இறப்பெதிர் காலம் பருகிலும் ஆர்வனோ (7.9.9): போன காலமும் வருங்காலமும் நான் அநுபவித்தால் தான் ஆர்வனோ. போன காலமும் அநுபவிப்பாராய்ச் சொல்லுகிறாரல்லர். எல்லாக் காலமும் அநுபவித்தாலும் ஆராதென்கைக்காக. இத்தால் நிரதிசயபோக்யம் என்றபடி.

5. இவ்வேழுலகையின்பம் பயக்க (7 10.1): இருவரும் கூடின சேர்த்தியாலே ஸகல லோகங்களுக்கும் ஆநந்தம் உண்டாம்படி. இப்படி போக்யதை கூறப்பட்டது.

இனி எட்டாம் பத்தில் கூறப்பட்ட ஸ்வாமித்வத்தை யநுபவிப்போம்:

1. "அடியனேன் பெரிய வம்மான் (8 1.3): நானே முறையிலே நின்றவாறே நீயும் முறையிலே நில்லா நின்றாய். அடியேன் என்று நான் சொல்ல நீ ஈச்வரனாயிரா நின்றாய். "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம், ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்தித"மிறே.

2. "விண்ணவர்கோன் நங்கள் கோனை" (8.2.2): நித்ய ஸூரிகளைப் போலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். ஒரு

விபூதியாகப் படுத்தின பாட்டைக்கிழர் என்னையொருத்தியை படுத்திற்று.

3. அமர்ந்த நாதனே (8.4.10) : உபய விபூதிக்கும் நாதன் என்றால் தக்கிருக்கும் அவனே. உபய விபூதிக்கும் நிருபாதிகசேஷீ என்றால் போரும்படி இருக்கிறவனே என்றபடி. "த்ரைலோக்யமபி நாதேந யேந ஸ்யாத் நாதவத்தரம்" என்கிறபடியே த்ரைலோக்யத்தையும் பெருமாளுக்குக் கையடைப்பாக்கினாலும் பின்னையும் ரக்ஷ்யம் சுருங்கி ரக்ஷகத்வத் துடிப்பே விஞ்சியிருக்கும்.

5. முனைவன் மூவுலகாளி (8.9.5) : திருப்புலியூர் முனைவன். அவ்வூருக்கு ப்ரதானன் மூவுலகாளி; அவ்வளவேயன்றிக்கே ஸமஸ்தலோகங்களுக்கும் நிர்வாஹகன். ஐச்வர்யத்துக்குப் புறம்பு ஒருவரைத் தேடிப் போகவேண்டா. ஸர்வஸ்வாமியென்றபடி.

5. நேர்பட்ட நிறைமூவுலகுக்கும் நாயகன் (8.9.11) : குறைவற்ற மூவுலகுக்கும் நேர்பட்ட நாயகன். "அநுரூப: ஸவைநாத: !" என்னக் கடவதிறே. "அநுரூப:" என்கிற பதம் அநுகூலமான திருமேனியையுடையவன் என்றும், நிரதிசயாநந்த யுக்தன் என்றும், ஸர்வவ்யாபகன் என்றும், பரவ்யூஹாதி ப்ரகார பஞ்சக விசிஷ்டன் என்றும், ருத்ராதி சரீர விலக்ஷண சரீரன் என்றும், கருடவாஹநன் என்றும் பற்பல அர்த்தங்களைக் காட்டவற்றாயினும் நிருபாதிகசேஷீ ஸர்வஸ்வாமி என்னும் அர்த்தத்தைக் காட்டும் இது ப்ரகரணோசிதமாயிருக்கும். ஸ்ரீமதே என்கிற சப்தம் தன்னாலே விசிஷ்டமான ப்ரதிஸம்பந்தி தோற்றித்தேயாகிலும் ஸர்வவித கைங்கர்யத்துக்கும் ப்ரயோஜகமான ப்ரீதிவிசேஷத்தைப் பிறப்பிக்கும் ஸம்பந்த குண விபூத்யாதி பரிபூர்ணாநுபவ ஸித்திக்காக இங்கு நாராயண சப்தம் ப்ரயுக்தமாகிறது. இப்படி போக்யதா ஸ்வாமித்வ ப்ரதிபாதக நாராயண சப்தார்த்தம் கூறப்பட்டது. (தொடரும்)

# இதிகாசங்கள்

லௌகிக வாழ்க்கையின் சகல பகுதிகளையும் உள்ளடக்கி ஒரு பெருங்கதையை எழுதக்கூடிய சக்தி இன்று எந்த எழுத்தாளருக்காவது உண்டா?

நாகரிகம் வளர்ந்துவிட்ட நிலையில், ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்து விட்ட நிலையில், பல நாட்டுக் கதைகளையும் படிக்கின்ற வாய்ப்பு அதிகப்பட்ட நிலையில், நம் மூதாதையர்களைவிட நாம் அறிஞர்கள் என்று கருதுகின்ற நிலையில், சகலவிதமான குணநிசயங்களையும் கொண்ட பல பாத்திரங்களை உருவாக்கி, ஒரே கதையாக எழுதுகின்ற சக்தி இன்று யாருக்காவது உண்டா? எனக்குத் தெரிந்தவரை இல்லை.

நம்முடைய இதிகாசங்களை வெறும் கற்பனைக் கதைகள் என்றே வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கற்பனைக்கு ஈடு

---

## கவிஞர் கண்ணதாசன்

---

கொடுக்க உலகத்தில் இன்னும் ஓர் எழுத்தாளன் பிறக்க வில்லை.

பெருங்கதைகளும் அவற்றுள் உபகதைகளுமாக எழுதப் பட்ட நமது இதிகாசங்களின் பாத்திரப் படைப்புத் தான் எவ்வளவு அற்புதம்!

அவை கூறும் வாழ்க்கைத் தத்துவங்கள்தான் எத்தனை!

நம்பிக்கை, அவநம்பிக்கை, ஆணவம், மீட்சி, காதல், கற்பு, ராஜதந்திரம், குறுக்குவழி, நட்பு, அன்பு, பணிவு, பாசம், கடமை!

—இப்படி வாழ்க்கையில் எத்தனை கூறுகள் உண்டோ அத்தனையும் நமது இதிகாசங்கள் காட்டுகின்றன.

மகாபாரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள் :

பொறுமைக்குத் தருமன்.

துடிதுடிப்புக்குப் பீமன்,

ஆண்மைக்கும் வீரத்திற்கும் அர்ச்சுனன்

மூத்தோர் வழியில் முறை முறை தொடர நகுலன், சகாதேவன்.

பஞ்சபூதங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்ட சக்தி மிக்க ஆன்மாவாக, பாஞ்சாலி.

உள்ளதெல்லாம் கொடுத்து, கொடுப்பதற்கு இல்லையே என்று கலங்கும் வள்ளலாகக் கர்ணன்,

நேர்மையான ராஜதந்திரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கண்ணன் !

குறுக்கு வழி ராஜதந்திரத்திற்கு ஒரே உதாரணமாகச் சகுனி !

தீய குணங்களின் மொத்த வடிவமாகக் கௌரவர்கள்.

தாய்ப்பாசத்திற்கு ஒரு குந்தி.

நேர்மையான கடமையாளனாக விதுரன்.

பாத்திரங்களின் சிருஷ்டியிலேயே சம்பவங்கள் கருக்கொண்டுவிட்டன.

இந்தப் பாத்திரங்களின் குணங்களை மட்டும் சொல்லி விட்டால் கதை என்ன என்பது தற்குறிக்கும் புரியும்.

இந்தக் கதை வெறும் ஆணவத்தின் அழிவை—தருமத்தின் வெற்றியை மட்டும் குறிப்பதல்ல.

லௌகிக வாழ்க்கையிலும் ஒவ்வொருவருக்கும் பயன் படக்கூடிய படிப்பினை இருக்கிறது.

கதையின் இறுதிக்களமான குருக்ஷேத்திரத்தில் கதையின் மொத்த வடிவத்திற்கும் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அதுவரை சொல்லிவந்த நியாயங்கள் தொகுத்து வழங் கப்படுகின்றன.

பகவத் கீதை, மகாபாரதக் கதையின் சுருக்கமாகி விடு கிறது.

அரசியல் சமுதாய நீதிக்கு அதுவே கைவிளக்காகி விடு கிறது.

கண்ணனை நீ கடவுளாகக் கருதவேண்டாம்.

கடவுள், அவதாரம் எடுப்பார் என்பதையே நம்ப வேண்டாம்.

பரந்தாமன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவன் என்றே எண்ணிப் பார்.

கீதையைத் தேவநீதியாக நீ ஏற்றுக்கொள்ளவில்லை யென்றால், மனித நீதியாக உன் கண்முன்னால் தெரியும்.

கண்ணன் வெறும் கற்பனைதான் என்றால், கற்பனா சிருஷ்டிகளில் எல்லாம் அற்புத சிருஷ்டி, கண்ணனின் சிருஷ்டி.

வாழ்வினை பற்றித் தெரிய வேண்டுமா? பாரதம் படி.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமா? பாரதம் படி.

ஒன்றை நினைத்தால் வேறொன்று விரியுமா? பாரதம் காட்டும்.

செஞ்சோற்றுக் கடனா? நன்றியறிதலா? பாரதம் காட்டும்.

பெற்ற மகனைத் தன் மகன் என்று சொல்ல முடியாத பாசக் கொடுமையா? குந்தியைப் பார்.

ரத்த பாசத்தால் உன் உள்ளம் துடிக்கிறதா? சொந்தச் சகோதரர்களை எதிர்த்துப் போராட வேண்டி வருகிறதா? அப்போது உனக்கு என்ன செய்வதென்று தோன்ற வில்லையா?

கீதையைப் படி.

ஏழைக்கும் பணக்காரனுக்கும் நட்பு இருக்கமுடியுமா?

கண்ணன் கதைக்கு உபகதையான குசேலன் கதையைப் படி.

விஞ்ஞானம் வளராத காலத்தில், போர்த்துறையில் எத்தனை வகையான ராஜதந்திரங்கள் இருந்தன?

அத்தனையையும் ஒட்டுமொத்தமாக அறிந்துகொள்ள, மகாபாரதம் படி.

ஒரு பாத்திரத்திற்கு ஒரு குண விசேஷம் என்றால், அதைக் கதையின் இறுதிவரையில் கொண்டு செலுத்திய கற்பனைச் சிறப்பை அளவிட வார்த்தைகள் இல்லை.

ராம கதைக்கு வா!

காதல் என்றால் என்ன என்பதைக் காட்டக்கூடிய இலக்கியம் அவற்குமேல் ஒன்றில்லை.

சகோதர பாசம் ராமனுக்கும், லட்சுமணனுக்கும், பரதனுக்குமிடையே முழு வடிவில் சதுராடுகிறது.

குகனைப்போல் ஒரு நண்பன் கிடைத்தால், நான் இருந்த இடத்தில் இருந்தபடியே கோட்டைகளைப் பிடிப்பேன்.

அனுமானைப் போன்ற ஓர் ஊழியன் கிடைத்தால், அகிலத்தையே விலைக்கு வாங்குவேன்.

சீதையைப் போன்ற ஒரு தேவதை கிடைத்தால், கம்ப னோடும் போட்டி போடுவேன்.

விபீஷணனைப் போன்ற ஒரு நியாயவான் கிடைத்தால், இன்றைய ஜனநாயகத்திற்கு நான் மரியாதை செலுத்து வேன்.

பாரதத்துக் கர்ணனைப் போல், இதிலே செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் கும்பகர்ணன், நன்றிகெட்ட உறவுகளுக்கு ஒரு சவால்!

கோசலையைப் போல் ஒரு தாயும், தசரதனைப் போல் ஒரு தந்தையும், யாருக்கும் அமைந்துவிட்டால், கொடிய வறுமைகூடத் தோன்றாது.

இவ்வளவு நல்லவர்களைக் கொண்ட ராம காதையை இரண்டே தீயவர்கள் நடத்திச் செல்கிறார்கள்.

முதற் பகுதியைத் தள்ளிவிடுகிறான் மந்தரை. இரண்டாவது பகுதியை ஏற்று நடத்துகிறான் இராவணன்.

ஆயிரம் நல்லவர்களுக்கு அவதியைத் தர இரண்டு மூன்று தீயவர்கள் போதுமென்கிறது ராம காதை.

மந்தரையும் சூர்ப்பநகையும் ராவணனுந்தாம் ராமனுக்குத் தெய்வ வடிவம் தருகிறார்கள்.

நிழல் அருமை வெய்யிலிலே நின்று அறியப்படுகிறது.

வைணவ இதிகாச சிருஷ்டி இப்படி வானோங்கி நிற்பது கண்டு, சைவர்கள் சிருஷ்டித்ததே முருகன் கதை.

அங்கே வில்,
இங்கே வேல்!
அங்கே ராமன்;
இங்கே முருகன்!
அங்கே ராவணன்;
இங்கே சூரபத்மன்!
அங்கே ராவணனுக்குச் சில தம்பிகள்;
இங்கே சூரபத்மனுக்குச் சில தம்பிகள்!

இரண்டிலும் ஏறத்தாழ ஒரே வகையான பாத்திரப் படைப்புகள்.

(விவரமாகத் தெரிந்துகொள்ள, திரு. ரா. பி. சேதுப் பிள்ளையின் 'வேலும் வில்லும்' படியுங்கள்.)

ஆயினும், வைணவர்களின் அற்புதக் கற்பனையைச் சைவர்கள் வெல்ல முடியவில்லை!

சைவர்கள் பெரும்பாலும் நாமாவளியாகவே பாடியிருக்கிருர்கள்.

"ஏறு மயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று" என்று, இருக்கின்ற முகங்களுக்குக் கணக்குச் சொன்னர்களே தவிர ஆழ்ந்த தத்துவங்களை அதன்மூலம் உணர்த்தவில்லை.

ஆண்டாள் திருப்பாவையைப் படித்தால்கூட நமக்கு மெய்சிலிர்க்கிறது.

மனித ஆன்மாவின் தெய்வீக ராகத்தை அது மெய் சிலிர்க்கக் காட்டுகிறது.

அஃதன்றியும், கடவுளைக் காதலனுகப் பாவிப்பது என்ற சம்பிரதாயத்தை முதலில் துவக்கியது வைணவந்தான்,

பிறகு சைவமும் அதைப் பின்பற்றிற்று.

சைவத்திலும், முருகனையும் பரமசிவனின் வேறுசில வடிவங்களையும் காதலனுகப் பாவிப்பது வழக்கில் வந்தது.

ஆனல், சக்தியையோ, பிற பெண் தெய்வங்களையோ காதலியாகப் பாவிப்பதாக இல்லை.

அங்கேயும் இந்துக்கள் பண்பாடு காத்தார்கள்.

காதல் என்பது பாசத்தின் முதிர்ச்சியாகவே காட்டப் பட்டது.

சில இடங்களில் காம உணர்ச்சி அதிகரித்திருந்தால், அது பரிபூரண நிலையைக் குறிக்கும்.

வேறு எந்த மதத்தவரும், இந்துக்களைப்போல் இறைவனேடு நேரடியாகப் பேசவில்லை.

உனக்கு ஏன் மாடு என்றும், வீடு கிடையாதா என்றும், தாய் தகப்பன் இல்லையா என்றும், அதனல்தான் ஒருவன் வில்லால் அடித்தான என்றும், ஏதோ நீண்ட நாள் பிரிந்திருந்த சொந்தக்காரர்களைக் கேட்பதுபோல், இறைவனைக் கேட்பவர்கள் இந்துக்கள்தான்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் அதிக இடைவெளியில்லாமல் சிருஷ்டித்தவர்களும் இந்துக்கள் தான்.

மூலமாக முளைத்தெழுந்தவனை உறவினன் ஆக்கிக் கொண்டவர்களும் இந்துக்கள் தான்.

காதல் வாழ்க்கையையும் திருமண வாழ்க்கையையும் கடவுளிடம் கண்டவர்கள் இந்துக்கள் தான்.

கடைசி ஏழைக்கும் கடவுளைச் சொந்தக்காரனுக்க, அவனை ஆண்டியாகக் கண்டவர்களும் இந்துக்கள் தான்.

அந்தத் தமிழக இந்துக்களிலே, சைவர்கள், முருகனைத் தமிழனாகக் கண்டார்கள்.

சைவர்கள் அவனைத் தமிழனாகக் கண்டபோது, வைணவர்கள் திருமாலைத் தமிழாலேயே அழைத்தனர்.

சைவர்கள் 'ஸ்ரீரங்கம்' என்று சொன்னால், வைணவர்கள் அழகு தமிழில் 'திருவரங்கம்' என்று சொல்லுவார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஆன்மாவும் ஸ்தூலமும் ஆனந்தமாக ஆடிப் பாடவேண்டும் என்பதே, இந்துக்களின் நோக்கமாக இருந்தது.

அந்த நோக்கத்தின் வடிவங்கள்தான் சைவ நடராஜனும், வைணவக் கண்ணனும்.

எங்கே தொட்டாலும், எதைப் படித்தாலும், இந்துக்கள் உருவாக்கிய பாத்திரங்கள் நம்மை வெறும் அந்த உலகிற்குக் கொண்டு போகவில்லை.

லௌகிக உலகத்தை எடுத்து எடுத்துக் காட்டுகின்றன.

கதைகளைப் பொய் என்று சொல்லலாம்.

அந்தக் கற்பனையின் சிறப்பை வியக்காமலிருக்க முடியாது.

சொல்லப்போனால், அத்தகைய கற்பனை, உலகத்தில், இந்தப் பல்லாயிரம் ஆண்டுகளில் வேறு எவனுக்கும் கிடையாது.

# எது உண்மை?

ஸ்ரீ கோடி கன்னிகாதானம் லக்ஷ்மீகுமார தாத தேசிகர் (ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோயிலின்) நித்யப்படி பூஜைகளையும், நிர்வாகங்களையும் கவனித்து வந்ததோடல்லாமல், மதில்களையும், மண்டபங்களையும் கட்டினார். அவற்றில் சில அவருடைய தகப்பனார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவை ஆகும். அவைகளுள் வியக்கத் தக்க ஒன்று, பல அற்புதச் சிற்பங்களைக் கொண்டிருக்கும் **நூற்றுக்கால் மண்டபமாகும்**.

(The Temple of Lord Varadaraja, Kanchi, by R. Varada Tatacharya. Page 23 - 24)

ஸ்ரீ மதாதிவண் சடகோப யதீந்திர மஹா தேசிகனின் நியமனம் பெற்று **நூற்றுக்கால் மண்டபம்** நிர்மிக்கப் பெற்றது என்று பிற்காலத்தவரும் அறியும் வண்ணம் நூற்றுக்கால் மண்டபத்திலுள்ள ஒரு தூணில் லக்ஷ்மீ நிருஸிம்ஹன் பிம்பத்தையும், அந்தத் தூணுக்கு எதிர்ப்புறமுள்ள தூணில் ஸ்ரீ மதாதி வண்சடகோப யதீந்திர மஹாதேசிகன் பிம்பத்தையும் சிற்பி செதுக்கி வைத்தான.

(ஸ்ரீ நிருஸிம்ஹப்ரியா—வித்தார்த்தி ஐப்பசி இதழ்—பக்கம் 19).

காஞ்சி அழகிய மணவாள ஜீயர் மடத்து **வைபவப் பிரகாசிகை** என்ற நூலின்படி, அழகிய மணவாள ஜீயர் தாயார் ஸன்னிதி, அபிஷேக மண்டபத்தின் வடக்குப் பிரிவு, நூற்றுகால் கல்யாண மண்டபம் ஆகியவைகளைக் கட்டியிருக்கிறார். ......... இதை நிரூபிக்கும் வகையில் அழகிய மணவாள ஜீயருடைய உருவம் நூற்றுக்கால் மண்டபத்தில் இரண்டிடங்களில் காணப்படுகிறது. இரண்டு சிற்பங்களிலும் அழகிய மணவாள ஜீயர் உட்கார்ந்த நிலையில், தென்கலைச் சின்னங்களுடன் காணப்படுகிறார்.

(Sri Varadaraja Swami Temple, Kanchi, by Prof. Dr. K. V. Raman. Page – 78)

(ஆக காஞ்சி நூற்றுக்கால் மண்டபத்தைக் கட்டியவர் கோடி கன்னிகாதானம தாததேசிகர் என்றும், ஆதிவண் சடகோபன் என்றும், அழகிய மணவாள ஜீயர் என்றும் மூன்று வகையான அபிப்ராயங்கள் மூன்று புத்தகங்களில் தெரிவிக்கப்படுகின்றன. இம் மூன்றில் எது உண்மை என்பதை அறிஞர்கள் விளக்குவார்களா ?)

# ஸ்ரீ பாஷ்ய ஸாரம்

(முன்தொடர்ச்சி)

இதற்குமேல் ஒன்று சொல்லலாம், "அதோ பக்ஷி உட்கார்ந்து கொண்டிருக்கிறதே; அவ்விடந்தான் தேவதத்தனுடைய கழனி" என்று ஒருவன் சொன்னால், தேவதத்தனுடைய கழனிக்கு பக்ஷியின் ஸம்பந்தத்தை லக்ஷணமாகச் சொன்னதாக ஆகிறது. இப்படிப்பட்ட லக்ஷணத்தினால் பக்ஷி யுறையுமிடமான கழனியில் தேவதத்த ஸ்வாமித்வம் தெரிவிக்கப்படு

P. B. அண்ணங்கராசாரியர்

கிறது. அதுபோலவே இங்கும் ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வம் ஆகிற மூன்றையும் ஜ்ஞாபக லக்ஷணங்களாகக் கொண்டு இவற்றால் ஒரு வஸ்து ப்ரஹ்ம பதார்த்தமாகத் தெரிவிக்கப்படுகிறது என்னலாம்.

இதுவும் பொருந்தாது. த்ருஷ்டாந்தத்தில், கழனியென்கிற வொரு வஸ்து ஏற்கனவே அறியப்பட்டிருக்கிறது. அப்படியறியப்பட்டிருந்த அதில் பக்ஷிவிசேஷத்தின் ஸம்பந்தத்தையிட்டு தேவதத்த ஸ்வாமித்வம் தெரிவிக்கப்பட்டது. அதுபோல இங்கும் தெரிவிக்கப்பட வேண்டிய ப்ரஹ்மத்திற்கு ஏற்கனவே அறிந்ததொரு தன்மை சொல்லியிருக்கவேண்டும், அதுவோ ஒன்றும் சொல்ல முடியாததாயிருக்கின்றது. ஆகவே ஜந்ம காரணத்வம் முதலியவற்றுக்கு [பக்ஷிவிசேஷ ஸம்பந்தாதிவத்] ஜ்ஞாபகத்வமும் ஸம்பவிக்கமாட்டாது என்ன வேண்டியதாகும்.

ஏன்? ப்ரஹ்மத்திற்கு ஏற்கனவே அறிந்ததொரு தன்மை சொல்ல முடியாதா என்ன? நன்றாகச் சொல்லலாமே. **"ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம"** என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் முதலானவையே முன்னமறிந்த தன்மைகள் என்னக்கூடாதோ வென்னில்; அங்கும் இந்த தோஷம் ஸமானமேயாகும்; ஸத்யத்வாதிகள் ஜ்ஞாபகமாகும் போது ஏற்கனவேயறிந்த தன்மையொன்று சொல்லியாக வேண்டும். ஜந்ம காரணத்வாதிகளைச் சொல்லுகிறோமென்ன வேணும். அதைத் தெரிந்துகொள்ளாமல் ப்ரஹ்மபதார்த்தம் தெரிவிக்க முடியாதாதலால் அந்யோந்யாச்ரயம் அபரிஹார்யமாகும். ஆகவே ஜந்ம காரணத்வாதிகள் லக்ஷணமாகப் பொருந்தமாட்டாவென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமல்லாமையாலே அதற்கு ஒரு லக்ஷணமும் சொல்ல முடியாததாலும் லக்ஷணத்தைக் கொண்டே எந்த வஸ்துவையும் அறியவேண்டுமாதலாலும், லக்ஷணத்தின் அஸம்பவத்தினால் அறியமுடியாததான இந்த பரப்ரஹ்மத்தைப்பற்றி விசாரம் செய்வதெப்படி? என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரித்துக்கொண்டு "ஜந்மாத்யஸ்ய யத:" என்கிற இரண்டாவது ஸூத்ரம் தோன்றியுள்ளதென்று கூறிப் பூர்வபக்ஷத்தையும் விவரித்தோம். இனி ஸித்தாந்தம் வருமாறு:—

ஒரு வஸ்துவுக்கு ஒரு லக்ஷணம் சொன்னோமானால் அந்த லக்ஷணமானது "மற்ற வஸ்துக்களிற்காட்டிலும் இந்த வஸ்து வேறுபட்டது" என்பதை நன்கு காட்டிக் கொடுக்குமென்று சொன்னோம். அப்படி வேறுபாட்டைக் காட்டுவதென்றால் என்ன? என்பதைச் சிறிது தெளிவாகத் தெரிந்துகொள்ள வேணும். விசேஷணங்களைக் கொண்டு நாம் வேறுபாட்டை யறியவேணும். விசேஷ்யத்தில் ஏதோவொரு தர்மம் இருப்பதாக விசேஷணம் காட்டும்; அந்த தர்மத்திற்காட்டிலும் வேறுபட்டதான எந்த தர்மமும் அதில் இருக்கமாட்டா

தென்று அதனுல் தெரிந்துகொள்ளுகிறோமா? அல்லது அந்த தர்மத்திற்கு விருத்தமான வேறெந்த தர்மமும் அதில் இருக்க மாட்டாதென்று தெரிந்து கொள்ளுகிறோமா? என்று பரிசீலிக்க வேணும். விசேஷணத்தினுலேற்பட்ட தர்மம் தவிர வேறு எந்த தர்மமும் அதில் [விசேஷணத்தில்] இருக்கமாட்டா தென்று தெரிந்துகொள்ளுகிறோமென்று தேறுமாகில் முற் கூறிய பூர்வபக்ஷம் ஸார்ஜிதமாகும். உண்மையோவென்னில்; அப்படியில்லே. ஒரு விசேஷணத்தினுல் விசேஷ்யத்தில் ஒரு தர்மம் காட்டப்பட்டதேயானுல் அதற்கு எதிரிடையான வேறு தர்மம் அதில் இருக்கமாட்டாதென்று நாம் தெரிந்து கொள்ளலாமேயன்றி அவிருத்தமான வேறெந்த தர்மமும் அதிலிருக்க மாட்டாதென்று நாம் தெரிந்துகொள்ள இயலாது. (உதாரணம்.) **"நீலோ வ்ருஷப:"** [கறுத்த எருது] என்கிறவொரு வாக்யத்தை யெடுத்துக்கொள்வோம். இதில் கருமை விசேஷணம். எருது விசேஷ்யம். **நீல:** என்கிற விசேஷணமானது இதர வ்யாவ்ருத்தியை [வேறுபாட்டை]க் காட்டுவதற்காகவே ப்ரயோகிக்கப்பட்டது. கறுப்பு நிறத் திற்கு விருத்தமான வெளுப்பு சிகப்பு முதலிய நிறங்கள் அந்த எருதினிடத்தில் இல்லையென்று இதனுல் நாம் தெரிந்து கொள்ளலாமேயல்லது இதற்கு அவிருத்தமான த்ரவ்யத்வம் முதலிய தர்மங்களும்கூட அதில் இல்லையென்று நாம் தெரிந்து கொள்ளமுடியாது. லோகாநுபவம் அப்படியில்லே. ஒரு விசேஷ்யத்தில் பல பல தர்மங்கள் இருக்கலாம். விசேஷணத் தினுல் அல்லது விசேஷணங்களினுல் எந்தெந்த தர்மங்களின் ஸத்பாவம் ஏற்படுமோ அந்த தர்மங்கள் தவிர வேறு எந்த தர்மமும் அந்த விசேஷ்யத்தில் கிடையாதென்கிற ப்ரதிபத்தி ஒரு நாளும் ஒருவற்கும் உண்டாகமாட்டாது. அந்த தர்மங் களோடு முரண்படும்படியான தர்மம் இருக்கமாட்டாதென் கிற ப்ரதிபத்தியே விளேயும். **''யுவா நீலோ வாமந: பங்குச்ச தேவதத்த:''** என்ருல் யுவாவாயும் கறுத்தவனுயும் குள்ளனுயும் நொண்டியாயும் தேவதத்தனிருக்கிறுன் என்று பொருள்படு கிறது. இதில் யுவா என்கிற விசேஷணமானது யௌவன

முடைய என்று காட்டி, யௌவனமென்கிற அந்த தர்மத்திற்கு விருத்தமான இளமையும் முதுமையுமில்லாதவன் என்று காட்டுமேயல்லது அதற்கு அவிருத்தமான நீலத்வம் வாமநத்வம் முதலிய தர்மங்களுமில்லாதவன் என்று காட்டமாட்டாதன்றோ? இப்படி ஒவ்வொரு விசேஷணத்தையுமெடுத்துக் கொண்டு விமர்சித்தறிக.

விருத்தமான தர்மங்களும் ஏககாலத்தில் இருக்க முடியாதேயொழிய கால பேதத்தினால் அவையும் ஒரே வ்யக்தியினிடத்தில் இருக்கத் தடையில்லை. "நீலவஸ்த்ரதாரீ தேவதத்த:" என்றால் ஒரு காலத்தில் கறுப்புத் துணியை அணிந்தவனும் மற்றொரு காலத்தில் வெளுப்புத் துணியை அணிந்தவனுமிருப்பதில் விரோதமில்லாமையாலே நீலவஸ்த்ரதாரீ என்கிற இந்த விசேஷணமானது காலாந்தரத்தில் (அந்த க்ஷணத்திலேயே] ஸம்பவிக்கக்கூடிய ச்வேத வஸ்த்ரதாரணத்தைத் தவிர்க்கமாட்டாதன்றோ. விசேஷணங்களைப்பற்றி இங்ஙனே தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பலவுள.

பிரகிருதத்தில் ஜந்மகாரணத்வம், ஸ்திதிகாரணத்வம், லயகாரணத்வமென்றுமிவை காலபேதத்தினால் ஒரு வ்யக்தியினிடத்திலேயே ஒன்று சேர்ந்திருக்கக் கூடியவையாதலால் அவிருத்தங்களேயாகும். விலக்ஷணசக்தியுக்தமான பரப்ரஹ்மத்தினிடத்தில் ஏககாலத்திலேயும் இவை கூடும். ஆகவே ஜந்மகாரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் பரப்ரஹ்மத்திற்கு பஹுத்வாபத்தியென்பதில்லை. பரப்ரஹ்மம் க்ஷேத்ரஜ்ஞர்களின் கருமங்களுக்குத் தக்கபடி ஸ்ருஷ்டி செய்ய வேண்டிய காலத்தில் ஸ்ருஷ்டிப்பதும் பிரளயம் செய்ய வேண்டிய காலத்தில் ஸம்ஹரிப்பதும் செய்கிறது. உலகில் உழவனானவன் விதை விதைக்க வேண்டியகாலத்தில் அதை விதைப்பதும் அறுக்கவேண்டிய காலத்தில் அறுப்பதும் செய்வதுபோல் இதனைக் கொள்க.

அன்றியும், உத்தர நாராயணாநுவாகம் முதலானவற்றில் லக்ஷ்மீபதித்வம் முதலிய அஸாதாரண சிஹ்நங்களினால் ப்ரதிபத்திக்கு விஷயமான வஸ்துவானது ஜந்மகாரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் ப்ரஹ்ம பதார்த்தமாக ஜ்ஞாபிக்கப் படுகிறதென்றும் கொள்ளக் குறையில்லாமையாலே இரண்டாவது பக்ஷத்திலும் தோஷமில்லை [முன்னே விவரிக்கப் பட்ட பூர்வபக்ஷத்தை மீண்டு வாசிப்பது.] ஏவஞ்ச, ஜகஜ் ஜந்மாதி காரணத்வமானது விசேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் ப்ரஹ்மலக்ஷணமாவதற்கு யாதொரு தடையுமில்லையென்று தேறிற்று. இன்னமும் இங்கு விரிவாகத் தெரிவிக்க வேண்டுமவை பலவுண்டு. அவை சாஸ்த்ரஜ்ஞானிகளுக்கே க்ரஹிக்கவும் ரஸிக்கவும் கூடியவையாதலால் இவ்வளவோடு நிறுத்தப்படுகிறது.

(தொடரும்)

## ஆயுள் சந்தா அளித்தவர்கள்

37 K. R. ரங்கராஜன், சென்னை-23.

38. A. P. வரதராஜன், சென்னை-5

39. T. R. ரங்கமணி, கல்கத்தா-19.

40. V. A. சாரி, கல்கத்தா-16

41. Prof. S. விஸ்வநாதன், தலைமைப் பேராசிரியர், ஸம்ஸ்க்ருதத்துறை, விவேகாநந்தா கல்லூரி, சென்னை-4.

ஸ்ரீ ராமாநுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீ பாஷ்யம்

தமிழாக்கம்: க. சந்தானம்

(எளிமையான எதிர்வாதம்—முன்தொடர்ச்சி)

கேட்டல் என்பது வேதாந்த வாக்யங்கள், "ஆத்மா ஒன்றே" என்ற கொள்கையை உபதேசிக்கின்றன என்று தத்வமறிந்த ஆசார்யனிடம் முறைப்படி கேட்டறிதலே; இவ்விதம் ஆசார்யன் உபதேசித்த அர்த்தத்தைத் தன் மனதில் ஆராய்ந்து, காரணங்களோடு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் சிந்தனை (மனனம்) ஆகும். இந்த ஞானத்திற்கு விரோதமானது, தன்னை ப்ரம்மத்திலிருந்து வேறுபட்டதாகத் தெரிவிக்கும் அநாதியான வேற்றுமை உணர்ச்சி. அதை நீக்க தான் சிந்தித்துத் தெளிந்த (தானே ப்ரம்மம் என்ற) அர்த்தத்தை தியானிப்பதே நிதித்யாசனம் எனப்படும்; கேட்டல் முதலியவைகளால் பிரம்மத்தைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்ற (தவறான) உணர்ச்சிகள் முழுவதும் நீங்குவதால், அவ்வித வாக்யார்த்தங்களின் ஞானமே அவித்யையைப் போக்குகிறது என்பது தெளிவு. எனவே இவ்விதக் கேள்வி அறிவுபெற எத்தகுதிகள் தேவையோ, அவையே கூறப்படல் வேண்டும். அவைகள்: நித்யமானதும் அநித்யமானதுமான பொருள்களைப் பகுத்தறியும் இயல்பு; மன அமைதி, இந்திரிய அடக்கம் முதலிய சாதனங்களாகிய பேறு; இம்மையிலும் மறுமையிலும் அடையக் கூடிய போகங்களில் பற்றில்லாமை; மோக்ஷத்தில் பேராவல்; ஆகிய நான்கே. இவைகளில்லாமல் ப்ரம்ம ஞானத்தில் விருப்பம் ஏற்படுவது சாத்யமில்லை. அவ்வப் பொருள்களின் தன்மையால் மேலே குறிப்பிட்ட நான்கு தகுதிகளுமே (ஸாதன சதுஷ்டயம்) "இனி" (அத) என்ற பதத்தின் பொருள் என்பது தெளிவாகிறது.

மேற்கூறியதன் உட்கருத்து: ப்ரம்மத்தின் சொரூபத்தை மறைக்கும், அவித்யையின் அடிப்படையாகப் பிறக்கும், உண்மையில்லாத வேற்றுமை உணர்ச்சியே பந்தத்தின் காரணம்.

பந்தம் உண்மையானது அல்ல. அந்த பந்தமானது அவித்யையுடன் சேர்ந்து உண்மையான பொருளாக இல்லாதிருப்பதால், ஞானத்தாலேயே விலக்கப்படுகிறது. அவித்யையை விலக்கும் இந்த ஞானம் "தத்வமஸி" (அதே நீயாவாய்) முதலிய வாக்யங்களால் உண்டாகிறது. இவ்வித வாக்யங்களால் ஏற்படும் ஞானத்தின் பொருளை விளக்கிக் கொள்ளவோ, அந்த ஞானத்தைப் பெறுவதற்கோ, செயல்களினால் (கர்மங்களினால்) ஆவது ஏதுமில்லை. அறிந்து கொள்ளும் ஆவலைத் தோற்றுவிப்பதற்கே கர்மங்கள் ,உபயோகப்படுகின்றன. அதுவும், பாவத்திற்குக் காரணமான ரஜஸ் (மன எழுச்சி) தமஸ் (மன இருள்) ஆகிய குணங்களை அடக்கி, சத்துவ (மன அமைதி) குணத்தை பெருக்குவதற்கே (சித்த சுத்தி ஏற்படுவதற்கே) கர்மங்கள் உபயோகப் படுகின்றன

ஆதலால் கர்ம ஞானமானது (ப்ரம்மத்தை அறியும் ஆவலைத் தோற்றுவிப்பதற்கு) உபயோகமில்லை. எனவே மேற்கூறிய நான்கு சாதனங்களே அதற்கு முன்னோடிகள் என்று உணரவேண்டும்.

எதிர்வாதம் முற்றிற்று

(வளரும்)



# திருக்கடிகை

## (கடிகாசலம்)

**அறிந்தும் அறியாதவை:** சோளிங்கபுரம் என்றால் பெரியோர் பலருக்கு நன்கு தெரியும். ஒரு முறை அவ்வூருக்குச் சென்று பகவானை ஸேவித்தவர்கள், மீண்டும் ஒருமுறை அவ்வூரை நினைத்தால், நரசிம்மர் எழுந்தருளி இருக்கும் பெரியமலையும் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ள சின்னமலையும் மனக்கண்முன் வந்து தோன்றி மகிழ்விப்பது இயற்கை! இவ்வாறு காண்பவர்கள் பெரும் பாக்கியசாலிகள்! சோளிங்க புரத்தைக் 'கடிகை' என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடு கிறார். இவ்வூரிலிருக்கும் மலையே 'கடிகாசலம்' எனப்படுகிறது.

## ஸ்தலசயனத்துறைவார்

'எந்தத் திவ்ய தேசத்திற்குச் சென்றாலும், அங்குப் பெருமானை ஸேவித்துவிட்டு, அவ்வூரிலேயே ஓரிரவு தங்கி இருக்கவேண்டும் என்று பெரியோர் கூறுவர். ஆனால், இவ்வூருக்கு வருவோர், 'கணப்பொழுது' இங்கு வசித்தாலும் போதும்! அவர்களுக்கு மோட்சம் உறுதி! சோளசிம்ம ராஜபுரம் என்னும் பெயர், சோளஸிம்ஹபுரம் என்றாயிற்று. நாளடைவில் 'சோளிங்க புரம்' என்றே மருவிவிட்டது! ஆனால், அக்காலத்தில் சோளிங்கபுரத்திற்கு இருந்த பெயர் 'கடிகாசலம்'. 'கடிகை' என்பதேயாம்.

**இதோர் அற்புதம் கேளீர்!:** திருவரங்கத்தில் நம்பெரு மாளுக்கு 'விபீஷண ஆராதனம்' என்று ஒரு நாள் நடை பெறுகிறது! காஞ்சிபுரத்தில் ஸ்ரீ தேவப் பெருமாளுக்கு பிரம்மாராதனம் என்று ஒரு நாள் நடைபெறுகிறது! திருவரங் கனை விபீடணனும், காஞ்சியில் ஸ்ரீவரதராஜரைப் பிரம்மாவும் தினந்தோறும் ஆராதித்து (பூஜித்து) வந்தார்கள் என்று பெரியோர்கள் கூறுவார்கள். அதுபோல், கடிகாசலத்தில்

(கடிகைமலையில்) உறையும் யோக நரசிம்மரை தினந்தோறும் 'ஸப்த ரிஷிகள்' ஆராதித்து வந்தார்கள் என்று கூறப்படுகிறது. அதற்கு அடையாளமாக இப்போதும் கடிகை மலைக்கு அருகில் இருக்கும் ஒரு குன்றுக்கு 'ஸப்தரிஷி மலை' என்று பெயர் வழங்கப்படுகிறது! பகவானை ஆராதிக்க வரும் ஸப்தரிஷிகளும் (ஏழு முனிவர்களும்) இந்த மலையில் தங்கிச் செல்வது வழக்கம் என்று அன்று முதல் இன்றுவரை கூறப்பட்டு வருகிறது.

**பிரம்ம தீர்த்தம் :** கடிகாசலத்தில் (சோளிங்கபுரம் மலையில்) பல புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன! அவற்றுள் பிரம்ம தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், சஞ்ஜீவி தீர்த்தம், ஸப்தரிஷி தீர்த்தம், லக்ஷ்மீ தீர்த்தம், சேஷ தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் புகழ் பெற்றவை. அவற்றுள் பிரம்ம தீர்த்தம் மிகச் சிறப்புடையது. இதைத் 'தக்கான்குளம்' என்று இப் போது கூறுகிறார்கள். இக்குளத்தில் நீராடினால் நோய்கள் நீங்கும்; இக்குளத்தின் பெயரைக் கேட்டாலே பேய், பிசாசு கள் நடுங்கும்; குளத்தைப் பார்த்தால் ஓடிவிடும். இக்குளத் தின் நீரைப் பருகுகிறவர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கிய மாக வாழ்வார்கள். சாலையிலிருந்து மிகவும் உயரத்தில் இருக்கும் இக்குளத்தில், மலையிலிருந்து ஓடிவரும் மருந்துப் பொருள் கலந்த மழைநீரே வந்து சேர்கிறது. இக்குளக் கரையில் ஸ்ரீதேவப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார். மனிதப் பிறவி சிறந்திருக்கவேண்டுமாயின் ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் இக்குளத்தில் நீராடவேண்டும். தக்கான் குளத்தில் நீராடுவோர்க்கு ஸ்ரீ அமுதவல்லியின் கடாக்ஷம் கிடைப்பது உறுதி!

**கோபுரவாசல் ஸேவை :** பிரம்மோத்ஸவ காலங்களில் பகவான் ஒரு நாள் கருட வாகனத்தின் மீது எழுந்தருளி ஸேவை ஸாதிப்பது வழக்கம். இந்த நிகழ்ச்சியைக் கருட ஸேவை என்றே கூறுவார்கள். பத்து நாட்கள் நடைபெறும் இப்பெருவிழாவில் கருடஸேவையும், திருத்தேர் மகோத்ஸ

வரும் மிகச் சிறப்புடையவை. காஞ்சி கருடஸேவை உலகப் புகழ் பெற்றது.

சோளிங்கபுரத்திற்கு அருகில் தொட்டாசாரியார் ஸ்வாமி என்பவர் எழுந்தருளி இருந்தார். அவர் சிறந்த ஞானி; அநுஷ்டான சீலர், அப்பய்ய தீட்சிதரை வாதத்தில் வென்றவர். அப்பய்ய தீட்சிதர் எழுதிய 'வேதாந்த தீபம்' என்ற அத்வைத நூலுக்கு பதிலளிக்கும் வகையில் 'சண்ட மாருதம்' என்ற கிரந்தத்தை அருளியவர் காஞ்சிபுரம் ஸ்ரீ தேவப் பெருமாளிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர்.

ஸ்ரீ தேவப் பெருமாளின் பிரம்மோத்ஸவத்தில் கலந்து கொள்வதற்காக ஆண்டுதோறும் சோளிங்கபுரத்திலிருந்து நடந்தே வருவார். வயது முதிர்ந்தது; உடல் தளர்ந்தது; நடையும் தள்ளாடியது. கருடோத்ஸவத்தில் ஸ்ரீ தேவப் பெருமானை ஸேவிக்க வேண்டும் என்ற ஆசைமட்டும் வளர்ந்தது!

காஞ்சியில் வைகாச மகோத்ஸவம்! அன்று கருடஸேவை! தொட்டாசாரியார் ஸ்வாமியால் நடக்க இயலவில்லை; அதற்காகத் தயங்கவும் இல்லை! திருமாளிகையை விட்டுப் புறப்பட்டார்; தக்கான் குளத்திற்கு அருகில் வந்தார். 'இந்த நேரத்தில் கோபுரவாசலில் ஸ்ரீ தேவப் பெருமாள் கருட வாகனத்தின் மீது எழுந்தருளிக் கொண்டு இருப்பாரே! சென்று ஸேவிக்க இயலவில்லையே' என்று வருந்தினர். மனம் தளர்ந்து அங்கேயே வீழ்ந்தார்.

பல ஊர்களில் இருக்கும் அடியார்களை ஒன்று சேர்த்துக் காண்பதற்காகவே பகவான் உத்ஸவங்களை நடத்திக் கொண் டிருஞன்! அன்று தேவப்பெருமாள் பெருங்கூட்டத்தை ஒருமுறை கவனித்தார்; ஸ்ரீ தொட்டையாசாரியாரைக் காணவில்லை; அவர் வரவில்லையே என்று குறை! தன்னை ஸேவிக்க வந்தவர் "வரதா" என்று கூறிக் கொண்டே தக்கான் குளத்தினருகில்

வீழ்ந்து விட்டதை அறிந்தார் ஸ்ரீ தேவப் பெருமாள்; அவருக்கு ஸேவை ஸாதிக்கத் தக்கான் குளத்திற்குச் சென்று விட்டார்.


இங்குக் கோபுரவாசலிலிருந்து பெருமாள் எழுந்தருள வில்லை! 'தொட்டாசாரியாருக்கு ஸேவை ஸாதிக்கச் சென்றிருப்பதாக' அர்ச்சகர் வாயிலாகப் பகவான் தெரிவித் தான். சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கிருந்து பெருமாள் திருவீதியில் எழுந்தருளத் தொடங்கினார்.

**பெரியோர் சொற்படி நட:** ஆழ்வார்களும் ஆசாரியர் களும் தம் நெஞ்சுக்கு அறிவுரை கூறுவார்கள். பகவானை நினைக்கச் சொல்லுவார்கள். அதன்படி அது செய்தால் 'நெஞ்சமே! நீ நல்லை நல்லை' என்று கொண்டாடுவார்கள். அவ்வாறு நடக்காவிட்டால் மனம் நொந்து பேசுவார்கள்.

எல்லாச் செயல்களையும் பகவான் எளிதில் செய்ய முடி யாது! 'என்னைத் திருத்த அவன் அரும்பாடு பட்டான். நுண் ணிய அறிவைக் கொடுத்து ஆட்கொண்டான்; வெற்றி பெற்று விட்டான்! நெஞ்சே! நீ அவனை நினைத்தாயா? அவன் செய்த உதவியையும் மறந்தனை! நீ செய்ந்நன்றி இல்லாதவனே! செய் நன்றி மறந்தவனுக்கு உய்வில்லை! இப்படி இருக்கிறாயே! இது என்ன துர்ப்புத்தி! இனியாவது நான் சொல்வதைக் கேள். நானும் மகிழ்வேன்; உலகமும் உன்னைக் கொண்டாடும்; கடிகாசலத்தில் இருக்கும் 'அக்காரக்கனி' எம்பெருமானை கணப்பொழுதேனும் நினை! நீ உய்வு பெறலாம்' என்று தன் நெஞ்சுக்கு அறிவுரை கூறுகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்!

**சீரருளால் நம்மைத் திருத்தி நாமுன்னறியாக்**
**கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே—நேரே**
**யொரு கடிகையும் மனமே யுள்ளுகிலாய் முத்தி**
**தரு கடிகை மாயவனைத்தான்.**

(நூற்றெட்டு திருப்பதி அந்தாதி—95)



சோளிங்கபுரம் சிறிய மலையில் எழுந்தருளியிருக்கும் ஹனுமான்